PR. 564

DF. 27.9.12

நிதி (வழிவகைகள்– II )த் துறை, நாள் : செப்டம்பர் 28, 2012

பத்திரிகைச் செய்தி

மொத்தம் **ரூபாய் 1200.00 கோடி** மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 10 ஆண்டுப் பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் **அக்டோபர் 1, 2012** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.00 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் பேர வணிகம் செய்தல் திட்டத்தில் (Negotiated Dealing System) மின்னணு படிவத்தில் (electronic format) **அக்டோபர் 1, 2012** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை–9.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9